2009 பிப்ரவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

49—

ஊடுபயிர்

***24196—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஊடுபயிர் வளர்க்கும் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன். சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஊடுபயிர் வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலினையில் இல்லை.

(முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழகம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள, பல்வேறு நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலும், ஊராட்சிப் பகுதிகளிலுள்ள பல்வேறு இடங்களிலும், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு மரங்கள் வளர்க்கப்பட்டு வந்தன. அது இப்போது கைவிடப்பட்டு இதுபோன்ற மரங்களை வளர்ப்பதற்குத் தனியாரை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள். ஏற்கெனவே கைவிடப்பட்ட இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும். நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலே, ஏரிகளிலே இப்போது ஆக்கிரமிப்பு என்பது அதிகமாக இருக்கிறது. ஏரிகளினுடைய விளிம்புப் பகுதிகளிலே, இதுபோன்ற மரங்களை வளர்ப்பதன்மூலம், ஆக்கிரமிப்புகளைத்

தடுத்திட ஒரு வாய்ப்பு ஏற்படும். மேலும், ஊராட்சிகளுக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியைக் கொடுக்கின்ற வாய்ப்பும் இருக்கின்றது. எனவே, அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வரவேண்டும். அதிலேகூட, நிறைய மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. மூலிகைச் செடிகளை அதிலே வளர்ப்பதற்கான முயற்சியினை எடுப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டம், 1981 ஆம் ஆண்டு முதல் ஸ்வீடன் நாட்டின் சர்வதேச வளர்ச்சி நிறுவனத்தின் உதவியோடு 1996 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, அந்த நிறுவனம் நிதி தருவதை நிறுத்திவிட்டது. இருந்தாலும்கூட, தொடர்ந்து பல்வேறு நிதித் தலைப்புகளின்கீழ் அந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தின்கீழ் ஏரிகளினுடைய பரப்புகளில் அல்லது அதுபோன்ற பொதுவான இடங்களிலே கருவேல மரங்கள், வெண்வேல மரங்கள்தான் நடப்பட்டு வந்தன. எனவே, அதிலே ஊடுபயிர் நடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. இப்பொழுது அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. இதில், நம்முடைய விவசாயப் பெருமக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமும், அங்கு கருவேல மரங்கள் வளர்க்கப்படுகின்ற காரணத்தினால், ஏரிகளில் நீரின் நிறம் மாறிவிடுகிறது என்றும், மேலும் அவற்றிலிருந்து விழும் பூக்களினால் பூச்சிகள் வருகின்றன என்றும், அதுபோக, நீர் வற்றிய காலங்களில், அதன் முட்கள் எல்லாம் அந்த ஏரிகளில் விழுந்துவிடுகின்ற காரணத்தினால், நீர் இல்லாத காலங்களில் ஆடு மாடுகளை மேய்ப்பவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்றும் கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அதற்குப் பிறகு இப்போது அம்மரங்கள் நடுவதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருப்பதைப்போல, ஊராட்சிகளில் உள்ள விவசாயிகள் விரும்பவில்லையென்றாலும், ஊராட்சிகளினுடைய

2009 பிப்ரவரி 23]

அமைப்புகளில் இருக்கின்ற தலைவர்கள் அதை விரும்புகிறார்கள். ஏனென்று கேட்டால், அதிலே வருகின்ற நிதி 60 சதவிகிதம், 40 சதவிகிதம் என்கின்ற அளவில் பிரித்துத் தரப்படுகிறது. 60 சதவிகித நிதி ஊராட்சிக்கும், 40 சதவிகித நிதி அரசுக்கும் என்கின்ற நிலையில் அது அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கின்ற காரணத்தினால், ஊராட்சித் தலைவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் அதற்கான அனுமதி வேண்டுமென்று எங்களுடைய துறையின் சார்பாகக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கு ஒத்துக்கொள்வார்களேயானால் அந்தத் திட்டம் தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளின் விளிம்புப் பகுதிகளில், மற்றும் பொதுவான இடங்களில் இதுபோன்ற முட்செடிகளை வளர்க்காமல், தைல மரம், சவுக்கு போன்ற மரங்களைப் பயிரிட்டால்—நீர்ப் பிடிப்பிலே செம்மரங்கள் தேவையில்லை—தைல மரம் போன்ற மரங்களை வைத்துவிட்டால் அவை நன்றாக வளரும். முள் இல்லாத மரங்கள் நடப்படுவதன்மூலம், அங்கு ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதற்கான ஒரு வாய்ப்பாக அது இருக்கும். மேலும், பொது இடங்களிலும் இதுபோன்ற மரங்களை நட்டால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியும் கூடுதலாகக் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆக்கிரமிப்புகளை அகற்றிடத் தேவையில்லை என்கின்ற ஒரு நிலையும் ஏற்படும். எனவே, செம்மரம் போன்ற மரங்களை ஊரின் முக்கியமான பகுதிகளில் உள்ள காலியான இடங்களில் நடுவதற்கும், எஞ்சிய நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் தைல மரங்கள் போன்ற மரங்களை நடுவதற்கும் அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும், ஊராட்சிக்குக் கொடுக்கப்படுகின்ற 60 சதவிகிதம் நிதி இன்னும் ஏராளமான ஊராட்சிகளுக்கு, உள்ளாட்சிகளுக்குக் கிடைக்கவில்லை என்ற குறை இருக்கிறது. அதுபோன்று, 60 சதவிகித நிதி என்பதைக் குறைத்துக் கொடுப்பதாகவும் பல்வேறு உள்ளாட்சித் தலைவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மறுபரிசீலனை

செய்து, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைக்கக்கூடிய நிதியைச் சரியாக 60 சதவிகிதம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலே, குளங்களிலே, ஏரிகளிலே கருவேல மரங்கள் போன்ற மரங்கள்தான், தண்ணீர் ஏரியில் வருகின்ற காலத்தில் அழுகிப் போகாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. மற்ற மரங்கள் எல்லாம் தண்ணீர் இருந்தால், மூன்று மாதம், நான்கு மாத காலம் தொடர்ந்து தண்ணீர் இருக்குமேயானால் அழுகிப் போய்விடும் என்ற காரணத்தால் அங்கு வேறு மரங்களைப் பயிரிட முடியவில்லை.

ஆனால், மத்திய அரசின் நிதி உதவியுடன் 2006–2007–லே, ஒரு கோடியே இருபத்து மூன்று இலட்சம் காட்டாமணக்குச் செடிகளைத் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நடைபெறுகின்ற கிராமங்களினுடைய எல்லையோரங்களிலே நாங்கள் நட்டிருக்கிறோம். அதைப்போல, உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, வைகை, மேட்டூர் நீர்த் தேக்கங்களுடைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வெட்டிவேர், கண்டங்கத்திரி அதைப்போல மாகாளிக்கிழங்கு, கிளாக்காய் போன்ற செடிகளை ஊடுபயிராகப் பயிரிட்டிருக்கிறோம். அப்படிப் பயிரிட்டதன்மூலம் மண் அரிப்பு தடுக்கப்பட்டு, நீர்த் தேக்கங்களுடைய பாதிப்பும் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மத்திய அரசின் நிதியுதவியுடன் 790 ஹெக்டேரிலே மூலிகைச் செடிகளும், மரபணுக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பயிரிடப்படுகின்றன. காடுகளினுடைய எல்லையோரங்களில், ஒதுக்குக் காடுகளுடைய எல்லையோரங்களில் காட்டாமணக்கு, கற்றாழைச் செடிகள் ஆகியவற்றைப் பயிரிடுவதோடு, மூலிகைப் பயிர்களான நித்திய கல்யாணி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, கரிசாலை அதைப்போல, கீழாநெல்லி, சீந்தில், தூதுவளை, பிரண்டை, நெருஞ்சில், மருதோன்றி, துளசி போன்ற செடிகளையெல்லாம் நாங்கள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர் சொன்னதைப்போல, தனியார் மரம் வளர்க்கின்ற அந்தத் திட்டத்தை நாங்கள் தரவில்லை. ஏனென்றால், மத்திய அரசு

2009 பிப்ரவரி 23]

33 விழுக்காடு, மரப் பரப்புகளாகவோ அல்லது வனமாகவோ இருக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், அந்த வனப் பகுதி 17.59 சதவிகிதம்தான் இருக்கிறது. அதைப்போல, அந்த மரப் பரப்பும் 21.75 சதவிகிதம்தான் இருக்கிறது. எனவே, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனியார் காடுகளில் மரம் வளர்க்கின்ற திட்டம், அதுவும் பணக்காரர்களுக்கு அல்ல, ஏழைகளுக்கு 2.5 ஏக்கர் மட்டும்தான் ஒருவருக்கு அதிகபட்சமாகத் தரமுடியும்; அந்த 2.5 ஏக்கர் நிலத்திலே அரசு எப்படி இலவச நிலம் தருகிறதோ, அதைப்போல, இலவசமாக மரம் நட்டு, அவர்கள் அந்த மரத்தை வளர்ப்பதற்கு ஆயிரம் ரூபாய் மானியம் கொடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த உன்னத திட்டத்தை, அரிய திட்டத்தை இந்தியாவிற்கு வழிகாட்டுகின்ற திட்டத்தை, உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கிடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சமூக காடுகள் என்பது நமது வனத் துறையினால் செய்யப்பட்டு வருகின்ற மிகச் சிறப்பான திட்டங்களுள் ஒன்று. சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாக்கின்ற, அதே வேளையிலே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதி ஆதாரங்களைப் பெருக்கித் தருகின்ற அந்தச் சமூகக் காடுகளுடைய பணி, உண்மையிலேயே பாராட்டப்படக்கூடிய பணி. இந்தச் சமூகக் காடுகள் வளர்க்கின்ற பணி 1981—லேயிருந்து தொடங்கியது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரித்தார்கள். அதற்கு முன்பே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள், சீமைக் கருவேல மரம் என்று சொல்லி—இங்கே வேலிகாத்தான் என்று சொல்லுவார்கள். அந்த மரங்களைத் தமிழ்நாடு முழுவதும் வளர்க்க, அந்த விதைகளை வெளி நாட்டிலிருந்து வரவழைத்து, இன்று பல மாவட்டங்களிலே அதுதான் வாழ்வாதாரமாக இருக்கிறது, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலே அந்தச் சீமை கருவேல மரம் வளர்ப்பதன் காரணமாகதான் அதிலேயிருந்து கரி எடுத்து, நிறைய குடும்பங்கள் பிழைத்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் காலத்திலே வருவாய்த் துறைக்குச் சேர்ந்த இடங்களை, சமூகக் காடுகள் வளர்ப்பதற்காக வனத் துறையிடம் ஒப்படைத்தார்கள். ஒப்படைக்கப்பட்ட அந்த வருவாய்த் துறையினுடைய இடங்கள்,

இப்போது பொது மக்கள் வசிக்கின்ற பகுதியாக மாறி வருகின்ற சூழ்நிலையிலே, ஏற்கெனவே, வருவாய்த் துறைக்குச் சொந்தமாக இருந்து வனத் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட இடத்தை, திரும்பக் கேட்கின்றபோது, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காகக் கேட்கின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்ட பின்னரும்கூட, வனத் துறையைச் சார்ந்தவர்கள் அந்த இடத்தை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்க மறுக்கிறார்கள்.

என்னுடைய சட்டமன்றத் தொகுதியில்கூட, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலே, நயினார் நகரம் என்ற ஊராட்சி மன்றத்திலே 130 ஏக்கர் நிலத்தைச் சமூக காடுகள் வளர்ப்பதற்காக, வருவாய்த் துறை, வருவாய்ப் புறம்போக்கு இடத்தினை வனத் துறையிடம் ஒப்படைத்து, அந்தக் காடுகளும் வளர்க்கப்பட்டு இப்போது 30 ஆண்டு, 40 ஆண்டு மரங்களாக இருக்கின்றன. அதிலே, 10 ஏக்கர் இடத்தை எடுத்து, மீண்டும் இலவச பட்டா வழங்குவதற்காக அதை (குறுக்கீடு) ஒப்படைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மக்கள் பிரச்சனையைப் பேசக்கூடாது என்பதற்காக நீங்கள் குறுக்கிடுகிறீர்கள். மக்கள் பிரச்சினையைப் பற்றி பேசினால் உங்களுக்குக் கோபம் வருகிறது. 10 ஏக்கர் இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏழை எளிய மக்களுக்குப் பட்டா வழங்குவதற்காக ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டு, வனத் துறை அலுவலகத்திற்கு அனுப்பியதிலே, வனத் துறை அதிகாரிகள் அதற்கு மாற்று இடம் கொடுத்தால்தான் அந்த இடத்தை நாங்கள் ஒப்படைப்போம் என்று அதை ஒப்படைப்பு செய்ய மறுக்கிறார்கள். எனவே, ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற அந்த முக்கியமான பணிக்காக, வருவாய்த் துறைக்கே சொந்தமான அந்த இடத்தினை, பதில் இடம் கேட்காமல் வருவாய்த் துறையிடம் ஒப்படைக்க வனத் துறை முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மரங்கள் எவ்வளவு முக்கியமானது என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அதை முக்கியம் என்று கருதிதான், மாண்புமிகு மறைந்த அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்த நேரத்தில் காடுகள் ஒரு வரம்பின்றி அழிக்கப்படுவதைத் தடுப்பதற்காக மிகக் கடுமையான திட்டம், வனப் பாதுகாப்புச் சட்டத்தை 1980–லே கொண்டுவந்தார்கள். அந்த நேரத்திலே ஒவ்வொரு அரசும் எது எது வனம் என்று வருவாய்த் துறையின்மூலமாகக் குறிப்பிடப்பட்டது. அப்படி வருவாய்த் துறையே வனப் பகுதி என்று—அதை அவர்கள் தரிசு நிலம் என்றோ அல்லது வேறு நத்தம் என்றோ குறிப்பிட்டு இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் வனப் பகுதி என்று—குறிப்பிட்டுக் கொடுத்தவுடன் வனம் என்று அது classify ஆன பிறகு, இப்பொழுது திரும்பப் பெறவேண்டுமேயானால்—அதற்கென்று விதிமுறைகளை வகுத்திருக்கிறார்கள்; நான் பல முறை சொல்லி இருக்கிறேன்; எனவே—அந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்தால்தான் அந்த வன நிலத்தைத் திரும்ப எடுக்க முடியும். ஒரு காலத்திலே அது வருவாய்த் துறை நிலமாக இருந்தது. அதை இப்பொழுது கொடுத்துவிடுங்கள் என்று கேட்டால் நாங்கள் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. த.அ. மேகநாதன் மற்றும் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

LEGISLATURE ... TRUTH ALONE TRIUMPHS

50—

மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணை

***32778—திரு. த.அ. மேகநாதன்:**
திரு. ஜி.கே. மணி:

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினம் தொகுதி, பாடூர் ஏரியில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?